# 15 சவால்களின் மத்தியில் பணி

பவுலின் மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தின் மையமாக அமைந்தது எபேசு ஆகும். இங்கு பவுல் முகம் கொடுத்த சவால்களுக்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பதில் அளித்தார். இந்த முன்மாதிரியைப் பின்பற்றி பலன் தரும் மறைத்தூதுப் பணியில் ஈடுபடுவது இப் பாடத்தின் நோக்கமாகும்

**திருத்தூதர் பணிகள் : 18:23, 21:19**

## மூன்றாம் மறைத்தூதுப் பயணம்

இப்பாடத்தில் பவுலின் மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தைப்பற்றி கற்கப் போகின்றோம். இங்கு எபேசு என்னும் நகருக்கு முதலாவதாக வந்தார். அப்பயணத் திற்கு திமோத்தேயு, தீத்து, லூக்கா என்போர் பவுலுடன் இணைந்து கொண்டனர்.

கி.பி.53-54 வரையிலான காலத்தில் 4024 கி.மீ தூரம் அப்பயணத்தில் அடங் கியுள்ளதாக காணப்படுகிறது.

முன்பு உருவாக்கிய திருச்சபைகளைத் திடப்படுத்தி கலாத்தியா, பிரிகியா பகுதிகள் வழியாகச் சென்றார்கள். (தி.ப:18:23)

## எபேசு

சின்ன ஆசியாவின் தலைநகராக இருந்த எபேசு பிரசித்திபெற்ற வணிக நகராகும். ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட பிரபல்யமான அர்த்தமி தேவதையின் ஆலயமும் இங்கு இருந்தது. பவுல் இரண்டு ஆண்டு காலமாக எபேசில் தங்கியிருந்தார். பல சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னோக்கிச் சென்றார் என்பதை திருத்தூதர்பணிநூல் சான்று பகர்கின்றது.
தி.ப :18:24 - 19:10

## எபேசில் நிகழ்ந்தவை

| | |
|---|---|
| ஆக்கில்லா பிரிஸ்கில்லா | அப்பொல்லோவைச் சந்தித்தனர். இவர் மறைநூல் களில் புலமை வாய்ந்தவர். ஆண்டவரின் நெறிகளைக் கற்றவர். திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். ஆக்கில்லாவும் பிரிஸ்கில் லாவும் அவருக்கு கடவுளின் நெறியைத் தெளிவாக விளக்கினர். |
| பவுல் | திருமுழுக்கு யோவானின் சீடர்களையும் கிரேக்கர் களையும் சந்தித்தார். யோவானின் சீடர்களுக்கு இயே சுவைப்பற்றி அறிவித்தார். அதன்பின் திருமுழுக்கு கொடுத்து கை வைத்தபோது தூயஆவியானவர் அவர்களிடம் இறங்கினார் அப்போது அவர்கள் பரவ சப்பேச்சுப் பேசினர். கிரேக்கருக்கும் இறை வார்த் தையைப் போதித்தார். |

# பவுலின் 3ம் தூதுரைப் பயணம்



## பவுல் எபேசில் வெற்றிபெற்ற சவால்

## தி.ப:19:1-17

பேயோட்டுபவர்களும் ஸ்கேவாவின் புதல்வர்களும் பவுலின் மூலமாக அநேக அற்புதங்கள் நடைபெறுவதைக் கண்டு, பவுல் அறிவித்த இயேசுவின் பெயரால் தாமும் அற்புதங்களை செய்வதற்கு முயற்சி செய்தனர்.

இவ்வாறு பேயோட்டுபவர்கள் இயேசுவின் பெயரைத் தவறாகப் பயன்படுத் தியமையால் அவர்களுக்கே அழிவை ஏற்படுத்திக் கொண்டனர்.
இந்த சவால்களினூடாக அனுபவித்த பிரதிபலன்

## இதன் மூலம் பெற்ற பிரதிபலன்

- இறைவல்லமை வெளிப்பட்டது.
- தீமைகளும் பொய்களும் அழிந்து போயின
- இயேசுவின் நாமத்திற்கு மகிமையை உண்டாகியது.
- மந்திர தந்திரங்கள் செய்த அநேகர் அவ்வழியிலிருந்து திரும்பி இறைவனை ஏற்றுக் கொண்டனர்.
- இறைவார்த்தை மிக வல்லமையாக விரிவடைந்து பரவிச் சென்றது.

## தி.ப:19:23-41

''மனிதக் கையால் செய்யப்பட்டவை தெய்வங்களல்ல'' என்ற பவுலின் போதனையின் காரணமாக

- அர்த்தமி கோவிலின் வடிவத்தை வெள்ளியில் செய்வித்து வியாபாரம் செய்தவர்களின் வருவாய் தடைப்பட்டது.
- பவுலுக்கு எதிராக, சிலை செய்யும் தெமோத்திரியு செயற்பட்டார். பவுலுக்கு எதிராக எபேசில் கலகம் நிலவியது.
- நகர ஆணையாளர் கலகத்தை நிறைவு செய்தார்.
- சிலை வழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த மனிதர்களைத் தடுத்து ஒரே கடவுளை வழிபடுவதில் ஈடுபடுத்தும் சவாலுக்கு பவுலும் குழுவினரும் முகம் கொடுத்தனர்.
- கையால் செய்யப்பட்ட சிலைகள்/சிலை வழிபாடுகள் அர்த்தமற்றது எனக் காண்பித்தார்.

## இதன் மூலம் பெற்ற பிரதிபலன்

மனிதர் சிலை வழிபாட்டை தவிர்த்ததனால் சிலைகளின் வியாபாரம் தடைப் பட்டது. ஒரே கடவுளை வழிபடுவதின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல்.

## *எபேசைச் சுற்றியுள்ள நகர்களில் மறைத் தூதுப்பணி*

தி.ப: 20:1 -21:19

- எபேசில் கலகம் ஒய்ந்தபின் பவுல் அங்கிருந்த சீடர்களைத் தைரியப்படுத்தி, சீரியாவிலிருந்து வந்த யூதர்களின் துன்பங்களின் மத்தியில் பணிபுரிந்து, பயணத்தைத் தொடர்ந்தார். (தி.ப:20:1-6)

- துரோவாவில் யுத்திகு என்னும் இளைஞருக்கு அற்புதமாக மீண்டும் உயிர் கொடுத்த சம்பவத்தை சவாலாக ஏற்றுக் கொண்டார் (தி.ப:20:7-12)

- எபேசில் இருந்த சபை மூப்பர்களை மிலேத்திற்கு அழைத்து வந்து தனது பணியைப் பற்றிய கருத்துக்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டார். புதிய விசுவாசிகளின் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்து அவர்களிடம் விடை பெறும் சவாலுக்கு முகம் கொடுத்தார்.

- தனக்கு ஏற்படப்போகும் துன்பத்தை அகபு வெளிப்படுத்திய போதும் அதனை அறிந்து கொண்டு தைரியத்தை இழக்காமல் எருசலேமிற்கு செல்லும் சவாலுக்கு முகம் கொடுத்தார்.

இவ்வாறு, பவுலும் அவரோடு இருந்தவர்களும் மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தை வெற்றிபெறச் செய்வதற்காக தைரியத்தோடும் அர்ப்பணிப்போடும் செயற் பட்டனர். அவர்கள் முகம் கொடுத்த அனைத்து தடைகளையும் சவால்களையும் வெற்றி கொண்டு தூயஆவியானவரின் தைரியத்திலும் பெலத்திலும் பணி செய்தனர்.

இறைவனுக்காக எமது மனதை ஈடுபடுத்தும்போது நாம் சவால்களுடனான சூழலிலேயே செயற்படுவோம். அவ்வாறான வேளையில் பவுலைப் போன்று வெற்றிகொள்வதற்கு தூய ஆவியின் வல்லமையையும் பெலனையும் பெற்று பயணம் செய்வோம்.

**செயற்பாடு**

01. எபேசில் பவுல் முகம் கொடுக்க நேர்ந்த சவால்களை அட்டவணைப் படுத்துக.

02. நீங்கள் முகம் கொடுக்க நேரிடும் சவால்களை தோல்வியுறச் செய்வதற்கு பவுலைப் பின்பற்றி செயற்படும் முறைகளை விளக்குக